திரு. லா. சந்தானம்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.27,68,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,40,93,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–7–2004) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் திருவாளர்கள் லிப்ரா எண்டர்பிரைசஸ் மற்றும் திருவாளர்கள் இரத்னா ஐயர்ன் சேஃப் கம்பெனி அரசு துறைகளுக்கு அறைகலன்கள் விற்பனை மீது குறிப்பிட்ட காலத்திற்கு செலுத்தத்தக்க வரியின் வேறுபாடு, மேல்வரி, கூடுதல் வரி, தண்டத் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 19–4–2004 ஆம் நாளிட்ட 204 ஆம்

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை மேல்வரி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/1971) பிரிவு 7(3) ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

56. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் கீழ் திருவாளர்கள் பன்னாரி மகளிர் சுய உதவிக் குழு குறிப்பிட்ட காலத்திற்கு செலுத்தத்தக்க விற்பனை வரியினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 22–4–2004 ஆம் நாளிட்ட 87 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

57. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கை நிறுவனத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

58. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம் –II) பதினெட்டாவது ஆண்டறிக்கை. (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

59. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம் –IV) ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

60. 2002–2003 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

61. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம் –II) இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

62. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. *(1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956) 619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

63. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. *(1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

64. 2002–2003 ஆம் ஆண்டிற்கான மதுரை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. *(1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

65. 2002–2003 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. *(1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

*66. 2002–2003*ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. *(1994*–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

67. 2002–2003–ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. *(1994*–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994) 165 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

TRUTH ALONE TRIUMPHS

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

32. மானியக் கோரிக்கை எண் *3* – நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2004–2005.* (தமிழ், ஆங்கிலம்)

33. மானியக் கோரிக்கை எண் *11* – வணிக வரித் துறை – முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2004–2005.* (தமிழ், ஆங்கிலம்)

34. மானியக் கோரிக்கை எண் *20* – நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2004–2005.* (தமிழ், ஆங்கிலம்)